# சர் ஐசக் நியூட்டன் கல்வியல் கல்லூரி - பாப்பாக்கோயில்

## கல்வியியல் துறை ( 2022 - 2023 )

## TNPSC பொதுத்தமிழ் & பொது அறிவு - தேர்வு : 2

மொத்த மதிப்பெண் : 120 காலம் – 1:30 மணி வகுப்பு : 6 & 7

1. கவிஞாயிறு தாராபாரதி எழுதாத நூல் எது ?

அ) புதிய விடியல்கள் ஆ) விரல் நுனி வெளிச்சங்கள்

இ) திண்ணையை இடித்துத் தெருவாக்கு ஈ) மனிதனைத் தேடுகிறேன்

2. காந்தியடிகள் தம்மைக் கவர்ந்த நூல்களாகக் குறிப்பிடப்படுவன யாவை ?

அ) தமிழ்க்கையேடு, திருக்குறள் ஆ) திருக்குறள், திருவாசகம்

இதமிழ்ச் செய்யுட் கலம்பகம் ஈ) Tamil Hand Book, History of Tamil Prase

3. உ.வே.சா அடி நிழலில் தமிழ்க் கற்க விரும்பியவர் யார் ?

அ) காந்திஜி ஆ) ஜி.யு. போப் இ) வீராமாமுனிவர் ஈ) நேரு

4. தாண்டவராயர் யாருடைய அரசவையில் அமைச்சராகப் பணிபுரிந்தார் ?

அ) ஜான்சிராணி லட்சுமிபாய் ஆ) வேலுநாச்சியார் இ) குந்தவை நாச்சியார்

ஈ) ராணி மங்கம்மாள்

5. தாயுமானவர் பாடல்கள் எது ?

அ) தமிழ்மொழியின் உபநிடதம் ஆ) தமிழ்மொழியின் சாரம் இ) தெய்வப்பாடல்கள்

ஈ) மெய்ப்பொருள் பாடல்கள்

6. **கூர்** என்பதன் பொருள்

அ) இனிமை ஆ) குறுகிய இ) மிகுதி ஈ) குறைவு

7. கால் முளைத்த கதைகள் யாருடையது ?

அ) சுந்தரராமசாமி ஆ) ராமகிருஷ்ணன் இ) புவியரசு ஈ) வெங்கட்சாமிநாதன்

8. ஓவியர் கலீல் இப்ரான் எந்த நாட்டைச் சார்ந்தவர் ?

அ) பெனின் ஆ) காங்கோ இ) லெபனான் ஈ) கென்யா

9. உழைக்கும் போது நீங்கள் புல்லாங்குழல் ஆகிவிடுகிறீர்கள் – யார் கூற்று ?

அ) புவியரசு ஆ) வைரமுத்து இ) முடியரசன் ஈ) இன்குலாப்

10. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு எது ?

அ) மாலத் தீவு ஆ) இலட்ச்ச தீவு இ) பல்லவத் தீவு ஈ) மணிபல்லவத் தீவு

11. **பிறிதின்நோய் தந்நோய் போல் போற்றாக் கடை** எனப் குறட்பா வரிகளில் இடம்பெற்ற **நோய்** என்பதன் பொருள் யாது ?

அ) தீங்கு ஆ) வருத்தம் இ) துன்பம் ஈ) உடற்பாதிப்பு

12. **நம்பி இருப்பவர் கும்பி எரிந்திடில் நன்மை உமக்கு வருமோ** என்ற வரி இடம்பெறுவது எந்நூல் ?

அ) ஆசிய ஜோதி ஆ) பாஞ்சாலி சபதம் இ) மகாபாரதம் ஈ) வில்லி பாரதம்

13. **கும்பி** என்பதன் பொருள் யாது ?

அ) பூமி ஆ) உலகம் இ) மழை ஈ) வயிறு

14. எட்வின் அர்னால்டு எழுதிய நூல் எது ?

அ) Wings of fire ஆ) Lights of Asia இ) The Secret of way ஈ) Vivilliam

15. **தனக்கென முயலா நோன்றாள்**

**முயலுநர் உண்மை யானே** என்ற வரிகள் இடம்பெற்ற நூல் யாது ?

அ) நற்றிணை ஆ) திருக்குறள் இ) புறநானூறு ஈ) இராமாயணம்

16. **குழந்தைகளைப் பாதுகாப்போம்** எனும் இயக்கத்தைத் தொடங்கியவர் யார் ?

அ) மலாலா ஆ) மூவலூர் இராமாமிர்தம் இ) சத்தியமூர்த்தி

ஈ) கைலாஷ் சத்யார்த்தி

17. **என்கதை, சங்கொலி** நூலாசிரியர்

அ) நாராயணக்கவி ஆ) பாரதிதாசன் இ) பாரதி ஈ) நாமக்கல் கவிஞர்

18. தோற்றவரை (அ) தோற்ற நாட்டினைப் பாடும் இலக்கியம்

அ) உலா ஆ) பரணி இ) கலம்பகம் ஈ) பள்ளு

19. **பகுத்தறிவுக் கவிராயர்**

அ) நாராயணக்கவி ஆ) ஒட்டக் கூத்தர் இ) பெரியார் ஈ) பட்டுகோட்டையார்

20. பேச்சு மொழியின் சிறப்புக்கூறுகளுள் ஒன்று எது ?

அ) வாய்மொழி ஆ) உணர்ச்சி மொழி இ) உடல் மொழி ஈ) எழுத்து மொழி

21. **எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்**

**திரியும் தத்தமில் சிறிது உளவாகும்** – எனக் குறிப்பிடும் நூல் எது ?

அ) தொல்காப்பியம் ஆ) சீவக சிந்தாமணி இ) நன்னூல் ஈ) மணிமேகலை

22. **கிளை மொழி அல்லாத மொழி** எது ?

அ) கன்னடம் ஆ) தமிழ் இ) தெலுங்கு ஈ) மலையாளம்

23. **உலக வழக்கு** என்பது

அ) எழுத்து மொழி ஆ) உணர்ச்சி மொழி இ) கிளை மொழி ஈ) பேச்சு மொழி

24. **எழுத்து மொழி** என்பது

அ) இலக்கிய வழக்கு ஆ) இலக்கண வழக்கு இ) உலக வழக்கு ஈ) மொழி வழக்கு

25. ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடி கூறுவது எந்த அணி ?

அ) தன்மையனி ஆ) ஒட்டணி இ) உவமையணி ஈ) பின்வரு நிலையணி

26. **செந்தமிழைச் செழுந்தமிழாய்க்** காண விரும்பியவர் யார் ?

அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) வாணிதாசன் ஈ) நாமக்கல்லார்

27. சுரதாவின் இயற்பெயர் எது ?

அ) சுப்புரத்தினதாசன் ஆ) இராச கோபால் இ) இராசமார்த்தாண்டன் ஈ) ஜானகிராமன்

28. **கொல்லிப் பாவை** எனும் சிற்றிதழின் நூலாசிரியர் யார் ?

அ) விந்தன் ஆ) இராசகோபால் இ) இராசமார்த்தாண்டன் ஈ) சா.கந்தசாமி

29. தமிழகத்தில் உள்ள **முண்டாந்துறை** வனப்பாதுகாப்பகம் எதற்குப் பெயர் பெற்றது ?

அ) சிங்கம் ஆ) மான் இ) புலி ஈ) யானை

30. **பண்புள்ள விலங்கு** என்று அழைக்கப்படுவது எது ?

அ) யானை ஆ) நரி இ) முயல் ஈ) புலி

31. இந்தியாவின் **வன மகன்** என்று அழைக்கப்படுபவர் யார் ?

அ) நவ்தீப்சிங் ஆ) ஜாதவ்பயேங் இ) இந்திரன் ஈ) இப்திகார் சௌதி

32. **அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்** – என்ற குறளின் சிறப்பினை எடுத்துக்கூறியவர் யார் ?

அ) இடைக்காடனார் ஆ) ஔவையார் இ) நச்செல்லையார் ஈ) பரணர்

33. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைச் **சுத்தத்தியாகி** எனப் பாராட்டியவர் யார் ?

அ) காந்திஜி ஆ) அண்ணா இ) பெரியார் ஈ) காமராசர்

34. **வீரபாண்டிய கட்டபொம்மு** கதைப்பாடல் தொகுப்பினை வெளியிட்டவர் யார் ?

அ) ந.பிச்சமூர்த்தி ஆ) ஜானகி மணாளன் இ) நா.வானமாமலை ஈ) சக்திவேல்

35. **கிளிக்கண்ணி** என்ற பாவகையைப் பாடியவர் யார் ?

அ) முடியரசன் ஆ) பிச்சமூர்த்தி இ) சுரதா ஈ) பாரதியார்

36. **தமிழ்க்கையேடு** நூலாசிரியர்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) வீரமாமுனிவர் இ) ஜி.யு.போப் ஈ) உ.வே.சா

37. **உவமைக் கவிஞர்** எனப் பெயர் பெற்றவர்

அ) ஷெல்லிதாசன் ஆ) பாரதிதாசன் இ) வாணிதாசன் ஈ) சுப்புரத்தினதாசன்

38. **தேசியம் காத்தச் செம்மல்** எனப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் புகழ்ந்தவர்

அ) வா.உ.சி ஆ) உ.வே.சா இ) திரு.வி.க ஈ) மா.பொ.சி

39. **சாகித்ய அகாடமி** விருது பெற்ற முதல் நூல்

அ) பிசிராந்தையார் ஆ) சித்திரப்பாவை இ) ஆகாயத்துக்கு அடுத்த வீடு ஈ) தமிழின்பம்

40. **தென்னாட்டுச் சிங்கம்** என அழைக்கப்பட்டவர்

அ) நேதாஜி ஆ) முத்துராமலிங்கத்தேவர் இ) கட்டபொம்மன் ஈ) ராணிமங்கம்மாள்

41. **மனம் போல் வாழ்வு** நூலாசிரியர்

அ) திரு.வி.க ஆ) மா.பொ.சி இ) வா.உ.சி ஈ) இரா.பி.சேதுப்பிள்ளை

42. **இரா.பி.சேதுப்பிள்ளை** அவர்களின் பணி எது ?

அ) வழக்கறிஞர் ஆ) ஆசிரியர் இ) வழக்குறைஞர் ஈ) நீதிபதி

43. **மெய்யறிவு** நூலாசிரியர்

அ) இரா.பி.சேதுபிள்ளை ஆ) உ.வே.சா இ) வா.உ.சி ஈ) மா.பொ.சி

44. மக்களை ஒடுக்க ஆங்கிலேய அரசால் கொண்டுவரப்பட்டச் சட்டம் எது ?

அ) பிட் சட்டம் ஆ) குற்றப் பரம்பரை இ) ஒழுங்குமுறை ஈ) நேரடி ஆட்சி சட்டம்

45. பொருத்துக

1) குச்சிப்புடி – கேரளா

2) மோகினி – ஆந்திரா

3) கதக் – அசாம்

4) சத்ரியா – வடஇந்தியா

அ) 2, 1, 4, 3 ஆ) 1, 2, 4, 3 இ) 3, 1, 2, 4 ஈ) 1, 2, 3, 4

46. **மனாட்டா** என்ற இலத்தின் சொல்லில் இருந்து உருவானது எது ?

அ) மனம் ஆ) பணம் இ) குணம் ஈ) அறிவு

47. மத்திய அரசின் அலுவல் மொழியாக **ஹிந்தியும்**, இணைப்பு மொழியாக **ஆங்கிலமும்**, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எந்த விதியின் கீழ் இடம் பெற்றுள்ளன ?

அ) விதி 360, 368 ஆ) விதி 352, 356 இ) விதி 343, 344 ஈ) விதி 243, 244

48. இந்திய அரசியலமைப்பு சட்டம் இறுதி வடிவம் பெறுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாட்கள் எவ்வளவு ?

அ) 1 வருடம் 6 மாதங்கள் 18 நாட்கள் ஆ) 2 வருடம் 11 மாதங்கள் 18 நாட்கள்

இ) 2 வருடம் 18 மாதங்கள் 11 நாட்கள் ஈ) 1 வருடம் 18 மாதங்கள் 6 நாட்கள்

49. இந்திய அரசியலமைப்புச் சட்டம் எத்தனை நாடுகளின் அரசியலமைப்பைத் தழுவி எழுதப்பட்டது

அ) 60 ஆ) 30 இ) 120 ஈ) இவற்றில் எதும் இல்லை

50. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதி முடிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் எத்தனை ?

அ) 100 ஆ) 114 இ) 124 ஈ) 200

51. **நியாசின்** என்ற **B Complex** விட்டமின் குறைபாட்டால் ஏற்படும் நோய் எது ?

அ) பெரிபெரி ஆ) பெல்லகரா (Pellagra) இ) ரிக்கட்ஸ் ஈ) மாலைக்கண்

52. **அறிவியல்** என்பதன் மூலச்சொல்லான **சைன்ஸியா** என்பது எம்மொழிச் சொல் ?

அ) ஆங்கிலம் ஆ) சீனம் இ) இலத்தின் ஈ) கிரேக்கம்

53. **இயற்பியல்** என்பதன் மூலச் சொல்லான **ஃபியுசிஸ்** என்பது எம்மொழிச் சொல் ?

அ) இலத்தின் ஆ) கிரேக்கம் இ) சீனம் ஈ) ஆங்கிலம்

54. பொருத்துக

1) ரிக் வேதம் – இசைப்பாடல்கள் (சங்கீத வழி)

2) யஜீர் வேதம் – துதிப் பாடல்கள்

3) சாம வேதம் – மாந்திரீகம் மற்றும் வரலாற்றுக் கதை

4) அதர்வண வேதம் – யாகம், சடங்கு, பலி தொடர்பானது

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 1, 4, 3 இ) 3, 4, 2, 1 ஈ) 2, 4, 1, 3

55. பொருத்துக

1) தமிழ்நாட்டின் மாப்பஸான் – சுந்தரராமசாமி

2) பசுவய்யா – கல்கி

3) தென்னாட்டுத் தாகூர் – கச்சியப்ப சிவாச்சாரியார்

4) தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் – ஜெயகாந்தன்

5) கற்பனைக் களஞ்சியம் – வேங்கடரமணி

அ) 1, 2, 3, 4, 5 ஆ) 2, 1, 4, 5, 3 இ) 4, 1, 5, 2, 3 ஈ) 5, 4, 3, 2, 1

56. **விசாரிப்பதன் மூலம் கற்றல்** என்பது எந்தப் பாடத்திற்குப் பொருத்தமாக அமையும் ?

அ) அறிவியல் ஆ) இந்தியப் பண்பாடு இ) அரசியல் ஈ) வரலாறு

57. கத்தாரில் நடைபெறவுள்ள கால்பந்து உலகக் கோப்பையில் நடுவர்களாக எத்தனைப் **பெண்கள்** நியமிக்கப்பட்டுள்ளனர் ?

அ) 2 ஆ) 3 இ) 5 ஈ) 36

58. தற்போதைய **இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர்** யார் ?

அ) ராஜீவ்குமார் ஆ) சுகுமார்சென் இ) V.S.ரமாதேவி ஈ) அருண்கோயல்

59. **தன்னெஞ்சு** பிரித்து எழுதுக.

அ) தன்மை + நெஞ்சு ஆ) தன் + நெஞ்சு இ) தன் + னெஞ்சு ஈ) தந் + நெஞ்சு

60. **யாதெனின்** பிரித்து எழுதுக.

அ) யா + தெனின் ஆ) யாத் + தெனின் இ) யாது + எனின் ஈ) யா + எனின்

61. **தந்து + உதவும் = தந்துதவும்** இதற்கான புணர்ச்சி விதி கண்டறிக.

அ) உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில் முன்ஒற்று உயர்வரின் இரட்டும்

இ) உயிர்வரின் உக்குறல் மெய்விட்டோடும்; இணையவும் பண்பிற்கியல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

62. **எங்கள் தமிழ்** பாடியவர்

அ) வாணிதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) நாமக்கல் கவிஞர்

63. **கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது** எனப் பாடியவர் யார் ?

அ) பாரதி ஆ) காந்திஜி இ) கவிமணி ஈ) வெ.ராமலிங்கம்பிள்ளை

64. **சாக்கிய முனி** என்று அழைக்கப்பட்ட மதபோதகர் யார் ?

அ) அசோகர் ஆ) மகாவீரர் இ) புத்தர் ஈ) வீரமாமுனிவர்

65. **இன்னுயிர்** பிரித்து எழுதுக

அ) இன் + உயிர் ஆ) இனி + உயிர் இ) இனிமை + யுயிர் ஈ) இனிமை + உயிர்

66. தமிழகத்தில் **முண்டாந்துறை** வனப்பாதுகாப்பகம் அமைந்துள்ள இடம் யாது ?

அ) களக்காடு ஆ) திருமறைக்காடு இ) ஈரோடு ஈ) சத்தியமங்கலம்

67.**வாசலலங்காரம்** பிரித்து எழுதுக

அ) வாச + அலங்காரம் ஆ) வாசல் + அலங்காரம் இ) வாச + லலங்காரம்

ஈ) வாசு + அலங்காரம்

68. முத்துராமலிங்கத் தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் எது ?

அ) சாயர்புரம் ஆ) சாயல்குடி இ) களக்காடு ஈ) வேதாரண்யம்

69. **வங்காளச் சிங்கம்** என அழைக்கப்படுபவர் யார் ?

அ) முத்துராமலிங்கத்தேவர் ஆ) வேலுநாச்சியார் இ) நேதாஜி ஈ) வல்லபாய்ப் படேல்

70. **கோமுகி** என்பது

அ) அரசனது முகம் ஆ) இறைவனது முகம் இ) பசுவின் முகம் ஈ) தீவின் முகம்

71. வா.உ.சி யின் கப்பல் கம்பெனிக்குத் தலைவராகப் பொறுப்பேற்றவர் யார் ?

அ) சுப்பிரமணியசிவா ஆ) பாண்டிதுரைத்தேவர் இ) முத்துராமலிங்கத்தேவர் ஈ) சுப்பிரமணிய ஐயர்

72. **குற்றியலிகர** மாத்திரை அளவு

அ) 1 ஆ) 1/2 இ) 1/4 ஈ) 3/4

73. **கொக்கியாது** என்பது

அ) முற்றியலிகரம் ஆ) முற்றியலுகரம் இ) குற்றியலுகரம் ஈ) குற்றியலிகரம்

74. கீழ்க்கண்டவற்றுள் **குற்றியலுகரம்** அல்லாதது எது ?

அ) மார்பு ஆ) பாக்கு இ) முழ்கு ஈ) ஏழு

75. **உயிர்த் தொடர் குற்றியலுகரத்துக்கு** எடுத்துக்காட்டுத் தருக.

அ) அரசு ஆ) பாக்கு இ) உப்பு ஈ) பத்து

76. கீழ்க்கண்டவற்றுள் **முற்றியலுகரம்** அல்லாதது எது ?

அ) உண்ணு ஆ) உருமு இ) தள்ளு ஈ) எய்து

77. **ஐகாரக் குறுக்கம்** சொல்லுக்கு முதலில் வரும் போது ஒலிக்கும் மாத்திரை அளவு

அ) 1 1/2 ஆ) 1 இ) 1/2 ஈ) 1/4

78. **சமையல், பறவை** என்ற சொல்லில் ஐகாரம் ஒலிக்கும் கால அளவு

அ) 2 ஆ) 1 இ) 1 1/2 ஈ) 1/4

79. **மகரக்குறுக்கத்திற்கு** எடுத்துக்காட்டு தருக.

அ) மருண்ம் ஆ) போலும் இ) மருளும் ஈ) பாடம்

80. **கஃறீது** என்பது **ஆய்த குறுக்கத்திற்கு** எடுத்துக்காட்டு எனில் அதன் மாத்திரை அளவு

அ) 1/2 ஆ) 1/4 இ) 1 ஈ) 1 1/2

81. **இல்முன்** என்பது **தகுதி வழக்கில்** என்னவாக வரும் ?

அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி இ) மரூஉ ஈ) குழூவுக்குறி

82. ஓலையைத் **திருமுகம்** என்பது எந்தத் தகுதி வழக்கில் அடங்கும் ?

அ) இடக்கரடக்கல் ஆ) மங்கலம் இ) குழூவுக்குறி ஈ) போலி

83. ஆடையைக் **காரை** என்பது

அ) மங்கலச்சொல் ஆ) குழூவுக்குறி இ) இடக்கரடக்கல் ஈ) போலி

84. சாத்தானை **சைத்தான்** எனக் கூறுவது .

அ) முதற்போலி ஆ) இடைப்போலி இ) கடைப்போலி ஈ) முற்றுப்போலி

85. நிலம் என்பதை **நிலன்** எனக் கூறுவது .

அ) முதற்போலி ஆ) இடைப்போலி இ) கடைப்போலி ஈ) முற்றுப்போலி

86. ஐந்து என்ற எண்ணை **அஞ்சு** என்பது .

அ) முதற்போலி ஆ) முற்றுப்போலி இ) கடைப்போலி ஈ) இடைப்போலி

87. இலக்கியச் சொல்வகையில் **திரி** சொல்லிற்கு எடுத்துகாட்டு.

அ) புஷ்பம் ஆ) விடம் இ) படர்ந்தான் ஈ) அச்சன்

88. கற்றோர்க்கு மட்டும் புலனாகும் இலக்கியச் சொல் வகை எது ?

அ) திசைச்சொல் ஆ) உரிச் சொல் இ) வடசொல் ஈ) திரி சொல்

89. தஞ்சாவூர் என்பதை **தஞ்சை** எனக் குறிப்பிடுவது ?

அ) இலக்கணப் போலி ஆ) இலக்கணமுடையது இ) மரூஉ ஈ) முற்றுபோலி

90. **மன், தில், கொல்** என்பன

அ) பெயர்பகாபதம் ஆ) வினைபகாபதம் இ) இடைபகாபதம் ஈ) உரிபகாபதம்

91. **உறு, தவ, நனி, கடி, வியன், சால** போன்ற சொற்கள்

அ) பெயர் பகுபதம் ஆ) உரிபகுபதம் இ) வினைபகாபதம் ஈ) உரி பகாபதம்

92. **பகுபத உறுப்புகள்** மொத்தம்

அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 4

93. சொல்லைப் பிரித்தால் அதன் **அடிச்சொல் (அ) வேர்ச்சொல்** பொருள் தருவது.

அ) பகுபதம் ஆ) பகாபதம் இ) பெயர்பகாபதம் ஈ) வினைபகாபதம்

94. **தருகுவென்** எனும் சொல்லில் இறுதியில் வரும் **என்** என்பது

அ) தன்மை ஒருமை வினைமுற்று விகுதி ஆ) தன்மை பன்மை வினைமுற்று விகுதி

இ) படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி ஈ) படர்க்கை பன்மை வினைமுற்று விகுதி

95. **மறதி, உணர்ச்சி, பார்வை, நோக்கு** என்பதன் இலக்கண குறிப்பு என்னவாக வரும் ?

அ) வினையெச்சம் ஆ) வினைமுற்று இ) வினையாலணையும் பெயர் ஈ) தொழிற்பெயர்

96. **தோன்றல், திரிதல், கெடுதல்** என்பன

அ) சாரியை ஆ) பகுதி இ) விகாரம் ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

97. கெடுவான் கேடு நினைப்பான் என்பதில் **கேடு** என்பதன் இலக்கணம் யாது ?

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) தொழிற்பெயர்

98. **வந்தவர்** என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) தொழிற்பெயர் ஆ) வினையெச்சம் இ) வினையாலணையும் பெயர்

ஈ) முதனிலைத் தொழிற்பெயர்

99. **இல்லையில்லை** என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) இரட்டைக் கிளவி ஆ) அடுக்குத்தொடர் இ) தொழிற்பெயர் ஈ) முற்றுருவகம்

100. **மலர்ப்பாதம்** என்பதன் இலக்கண குறிப்பு

அ) உருவகம் ஆ) உவமைத் தொகை இ) எண்ணுமை ஈ) வினைத்தொகை

101. கீழ்கண்டவற்றுள் எது **உருவகம்** ?

அ) பவளவாய் ஆ) முகத்தாமரை இ) தரமரைமுகம் ஈ) தேன் தமிழ்

102. சொற்களைப் பிரித்தால் பொருள் தராதது எது ?

அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக் கிளவி இ) இல்பொருள் உவமை ஈ) முற்றுருவகம்

103. **வெள்ளை உழுதது** என்பதன் இலக்கண குறிப்பு யாது ?

அ) அடுக்குத்தொடர் ஆ) ஆகுபெயர் இ) பண்புப்பெயர் ஈ) இரட்டைக் கிளவி

104. **காளை வந்தான்** என்பது

அ) உவமையாகுபெயர் ஆ) பொருளாகு பெயர் இ) சினையாகு பெயர் ஈ) பண்பாகுபெயர்

105. **அகழ்வாரை தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை** – இக் குறட்பாவில் பயின்றுவரும் அணி எது ?

அ) உருவக அணி ஆ) தன்மையனி இ) உவமையணி ஈ) ஒட்டணி

106. **தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு**

**கற்றனைத் தூறும் அறிவு** – இதில் பயின்றுவரும் அணி எது ?

அ) உவமையணி ஆ) உருவக அணி இ) எடுத்துக்காட்டு உவமையணி

ஈ) இல்பொருள் உவமையணி

107. **கொம்பு முளைத்த குதிரை** எந்த அணிக்கு எடுத்துக்காட்டு ?

அ) இல்பொருள் உவமையணி ஆ) எடுத்துக்காட்டு உவமையணி

இ) உருவக அணி ஈ) ஏகதேச உருவக அணி

108. **வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்** என்பது

அ) வினையெச்சம் ஆ) குறிப்புவினைமுற்று இ) தெரிநிலை வினைமுற்று ஈ) முற்றெச்சம்

109. **சீதா படித்திலள்** என்பது

அ) குறிப்புவினை ஆ) வினைமுற்று இ) எதிர்மறை வினைமுற்று ஈ) உடன்பாடு வினைமுற்று

110. **பாடும் பாடல்** என்பதன் இலக்கணம்

அ) தெரிநிலை பெயரெச்சம் ஆ) குறிப்புப் பெயரெச்சம் இ) வினையெச்சம் ஈ) பெயரச்சம்

111. **மெல்ல வந்தாள்** என்பதன் இலக்கணம்

அ) தெரிநிலை வினையெச்சம் ஆ) குறிப்பு வினையெச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

112. **இவன் கரியன்** என்பதன் இலக்கணம்

அ) குறிப்புவினைமுற்று ஆ) ஏவல் வினைமுற்று இ) வியங்கோள் வினைமுற்று

ஈ) தெரிநிலை வினைமுற்று

113. **வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல்** போன்ற சொல்லில் வரும் வினைமுற்று எது ?

அ) ஏவல் வினைமுற்று ஆ) தெரிநிலை வினைமுற்று

இ) வியங்கோல் வினைமுற்று ஈ) குறிப்பு வினைமுற்று

114. 96, 13, 74, 22, 65, 53, 49, ஆகிய எண்களுக்கான **இடைநிலை** யாது ?

அ) 13 ஆ) 22 இ) 53 ஈ) 65 உ) 49

115. முதல் 20 இயல் எண்களுக்கான **வீச்சு** யாது ?

அ) 20 ஆ) 19 இ) 1 ஈ) 0 உ) 18

116. 43, 24, 38, 56, 22, 39, 45, இப்புள்ளி விவரங்களுக்கு **வீச்சுக்கெழு** கண்டறிக ?

அ) 17 ஆ) 34 இ) 0 ஈ) 0.436 உ) 0.346

117. 25, 28, 32, 22, 20, 28, 30, 27, 30, 28, இத்தொகுப்பின் **முகடு** யாது ?

அ) 25 ஆ) 28 இ) 22 ஈ) 30 உ) 27

118. 5, 10, 15, 20, 25, ன் **கூட்டுச்சராசரி** ?

அ) 15 ஆ) 20 இ) 25 ஈ) 75

119. 42, 48, 52, 37, 46, 42, 50, 37, 38, இத்தொகுப்பின் **முகடுகள்** யாவை ?

அ) 42, 48 ஆ) 37, 42 இ) 42, 46 ஈ) 48, 42 உ) 37, 38

120. 6, 8, 9, 14,13 என்ற விவரத்தில் **சராசரி** 10. 10 லிருந்து ஒவ்வொரு விவரத்திலிருந்து விலக்கங்களின் கூட்டுத்தொகையைக் கண்டறிக.

அ) 50 ஆ) 5 இ) 0 ஈ) 10